**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 17.12.2024
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இலவச உடல்நலப் பரிசோதனை முகாம்**

மாணவர் நலமையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும் ஆரோ மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையும் (இன்ஹவுஸ் மெடிகேர் பிரிவு), கோயமுத்தூர் இணைந்து இரண்டு நாள் இலவச உடல்நலப் பரிசோதனை முகாமினை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலுள்ள மாணவர் நலமையத்தில் நடத்தியது.

இம்முகாமினை முன்னதாக முனைவர் வெ. கீதாலட்சுமி, துணைவேந்தர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் அவர்கள் துவக்கி வைத்தார். ஆரோ மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் (இன்ஹவுஸ் மெடிகேர் பிரிவு) தலைமை மருத்துவர் மற்றும் நிறுவனர் டாக்டர். ஹசீப்கான், எம்.டி., நோயளிகளுக்கான மருத்துவ மற்றும் ஆலோசனை வசதிகள் குறித்து எடுத்துரைத்தார். மாணவர் நலமையத்தின் முதன்மையர், முனைவர். ந. மரகதம் அவர்கள் இந்நிகழ்ச்சியை திறம்பட நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

ஆரோ மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் இருந்து மருத்துவ நிபுணர்கள் டாக்டர். கே.எஸ். கேசவராஜ் (முதியோர் மருத்துவம்), டாக்டர். சுகிர்தா (மருத்துவர்), டாக்டர். கவிதா (தோல் நோய் மருத்துவர்), டாக்டர். ஜெயஸ்ரீ (மகளிர் மருத்துவ நிபுணர்), டாக்டர். பாலசுப்பிரமணி (பொது அறுவை சிகிச்சை நிபுணர்), திருமதி. பவித்ரா (பிசியோதெரபிஸ்ட்) ஆகியோர்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு வருகை புரிந்து ஆலோசகர் சேவைகள் மற்றும் பிற நோய் கண்டறிதல் ஆய்வுகளை மேற்கொண்டனர். இம்முகாமில் உயரம், எடை, பிஎம்ஐ, பிஎம்டி, ஈசிஜி, பிஎ.்.ப்டி, இரத்த அழுத்தம், பிசியோதெரபி ஆலோசனைகள். பல்கலைக்கழக மருத்துவர் டாக்டர். ரம்யா

நிகழ்ச்சி சுமூகமாக நடைபெற பல்கலைக்கழக மருத்துவமனையின் மருத்துவர்கள் மற்றும் பிற சுகாதார நிபுணர்களுடன் இணைந்து செயல்புரிந்தார்.

ஆரோ மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் நிர்வாக அதிகாரி திரு. ரமேஷ் மந்திரி, உடல் நல பரிசோதனை நிபுணர்களுடன் இணைந்து முகாமினை ஒருங்கிணைத்தார். இவ்விழாவின் ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பானது மாணவர் நல மையத்தில் பணி புரியும் பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்டது.

***மக்கள் தொடர்பு அலுவலர்***